# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2447 - 2025 ජූලි මස 25 වැනි සිකුරාදා - 2025.07.25

2447 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 324 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 329 |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, ஒகத்து மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஒகத்து மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பாதஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) எச். கே. சாகரிகா தில்ஹானி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1998.10.29 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள ம/ப/1559 ஆம் இலக்க அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான மயிலகஸ்யாய குடியிருப்பு எனும் முகவரில் வசிக்கும் கிரிமுரேகே மில்ரட் என்பவருக்கு கையளிக்கப்பட்டு கண்டி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் LOD/ G06/131/99 இலக்கத்தின் கீழ் 1993.03.03 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட வில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.08.15 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டணை**

கண்டி நிர்வாக மாவட்டத்தின் பாதஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவின் ஹேவாவிஸ்ஸ பற்றில்/ கோறளையிலுள்ள உடமயிலபிட்டிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மயிலகஸ்யாய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், பாத்துஹெவாஹெட பிரதேச செயலாளர் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 61/5/2 ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/ ............ என்பவரால் தயாரிக்கப்பட்டு பி. பி. ஏ. 2324 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைப்படத்தில் .................. என்பவரால் தயாரிக்கப்பட்ட மஹ/வி/கு 89/04 ரேகை வரைதலில் 01 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் ஹெக்டேயர்/ ஏக்கர் - றூட் - பேர்ச் 20 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : குடியிருப்பு வீதி;
கிழக்கு : துண்டு இலக்கம் 33;
தெற்கு : குடியிருப்பு வீதி;
மேற்கு : துண்டு இலக்கம் 35.

எச். கே. சாகரிகா தில்ஹானி,
பிரதேச செயலாளர்,
பிரதிக் காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கு இடைப்பட்ட),
பாதஹேவாஹெட்ட.

2024, மே 13.

07 - 759/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள தெல்தொட்டை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ரத்னாயக முதியன்சேலாகெ சமீர நுவன் ரத்னாயக ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ், அதிஉத்தம சனாதிபதி அவர்களால் 1994.11.07 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள மத்தியம/ பா ஹெ/681 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான உடதெல்தோட்டை எனும் முகவரியில் வசிக்கும் பெரகார

கெதர அகோரிஸ் என்பவருக்கு கையளிக்கப்பட்டு கண்டி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் LDO/G02/151/95 ஆம் இலக்கத்தின் கீழ் 1995.03.10 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்பு பத்திரத்ததை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.08.15 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

கண்டி நிருவாக மாவட்டத்தின் பாதஹேவாஹட்டை பிரதேச செயலாளர் பிரிவின் கம்தஹய தகுன/ கோறளையிலுள்ள பாழுகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த உடதெல்தோட்டை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ............ என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 1 25/63 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் பிரிக்கும் வரைபடத்தில் ............... என்பவரால் தயாரிக்கப்பட்ட மு. பி. மஹ.728 இரேகை வரைதலில் 19 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் றூட் 01 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரசக காணித்துண்டு: பெல்வுட் வத்த

வடக்கு : கட்டி இல. 15 கலஹா தலாதுஒய வீதி கட்டி இல. 20;
கிழக்கு : கட்டி இல. 15 கலஹா தலாதுஒய வீதி பதைக்கு உரித்தான மற்றும் கட்டி இல. 18;
தெற்கு : கட்டி இல. 18 பெல்வுட் வத்த;
மேற்கு : கட்டி இல. 20 மற்றும் பெல்வுட் வத்த.

ஆர். எம். எஸ். என். ரத்னாயக,
பிரதேச செயலாளர்,
தெல்தோட்டை.

2025, சனவரி 22.

07 - 759/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப்பத்திரத்தினை இரத்து செய்வதற்கான - (104 ஆம் பிரிவு) அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின், கண்டி மாவட்டத்தில், உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) ஆத்மா திலுக்ஷி ஜயரத்ன ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் மாண்புமிகு சனாதிபதி அவர்களினால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று இரண்டாம் ஆண்டு யூலை மாதம் இருபதாம் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/ மஹ/உப/42 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய நவ ரொக்ஸ்சைல் குடியிருப்பில், வசிக்கும் மஹ விதானலாகே தொன் சுமதிரத்ன அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஓ. சீ. 7/184 ஆம் இலக்கத்தின் கீழ் 1992.09.14 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2025.08.15 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

கண்டி நிருவாக மாவட்டத்தில் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் கந்துகர இஹல பத்துவ/ கோரலேயில் புஸ்ஸெல்லாவ கிராம அலுவலர் பிரிவில் புஸ்ஸெல்லாவ இஹலகம என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும், மற்றும் நில

அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பி.பி. மஹ.3311 ஆம் இலக்க 31 ஆம் இலக்கக் காணித்துண்டு, அளவில் 0.189 ஹெக்ரயார் விஸ்தீரணத்தை உடையதுமான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்ட அரச காணி: ரொக்ஸ்சைல் குடியிருப்பு

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 29;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 30;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 32;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 28.

ஆத்மா திலுக்ஷி ஜயரத்ன,
பிரதேச செயலாளர்,
உடபலாத - கம்பொல.

2024, செத்தெம்பர் 30.

07 - 759/3

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கொடுப்பனவுப் பத்திரத்தை ரத்துச் செய்தல் - 104 ஆம் பிரிவுக்கான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தின் யட்டினுவர பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலளர் சந்தியா மத்துமதேவி சந்திரசேகர குணரத்ன ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் முன்னால் மேதகு சனாதிபதியால் 1995 நவெம்பர் மாதம் 08 ஆம் திகதி வழங்கப்பட்ட, இலக்கம் மத்திய/ யனு/ 753 கொண்ட கையளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான அலகல்ல குடியிருப்பில் வசிக்கும் புளுகம்மன கெதர முத்துபண்டா என்பவருக்கு வழங்கப்பட்டிருக்கும் கண்டி மாவட்டப் பதிவாளர் காரியத்தில் இலக்கம் LDO/B/03/131/95 இன் கீழ் 1995.11.16 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின் உரித்தாளராவதற்கு ச ட்டரீதியாக உரித்தாளர் ஒருவர் இல்லாத காரணத்தினால் அல்லது உரித்து உடைய ஒருவர் இருந்த போதும் அவர் பின்னுரித்தாளராவதற்கு விருப்பமில்லாத காரணத்தால், பின்னுரித்துரிமைக்கு ஒருத்தர் நியமிக்கப்படுவதற்கு இல்லை என அறிவிக்கப்பட்டு இருப்பதால் அக்கொடுப்பனவுப் பத்திரத்தை மேற்படி சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் ரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக இத்தால் அறிவிக்கின்றேன். இது தொடர்பில் ஏதும் எதிர்ப்புகள் இருப்பின் அதனை 2025.08.15 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

மத்திய மாகாணத்தின் கண்டி நிர்வாக மாவட்டத்தின் யட்டினுவர பிரதேச செயலாளர் பிரிவின் கந்துப்பலாத கோரலே அலகல்ல மேல் கிராம அதிகாரி பிரிவில் கொடிகமுவ என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும் யட்டினுவர பிரதேச செயலாளர் பொறுப்பில் உள்ளதுமான மற்றும் அரச காணி அளவையாளரால் தயாரிக்கப்பட்ட ஆ. வ. மஹ 3539 ஆம் இலக்க வரைபடத்தின் 16 ஆம் இலக்க காணித் துண்டு என்று காட்டப்பட்டுள்ளதுமான, 0.101 ஹெக்டேயர் பரப்பளவு கொண்ட கீழ்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள அரச காணி:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 15;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 17 மற்றும் 61;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 62 மற்றும் 2;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 2.

எஸ். எம். சி. குணரத்ன,
பிரதேச செயலாளர்,
யட்டினுவர.

2024, நவெம்பர் 21.

07 - 759/4

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

## காணி அபிவிருத்தித் கட்டளை சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப்பத்திரத்தினை இரத்துசெய்வதற்கான - (104 ஆம் பிரிவு) அறிவித்தல்

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் பஸ்பாகே கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) ஜே. எம். ரம்யா ஜயசுன்தர ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 1986.01.28 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மஹ/பீ/5649 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய இங்குருஓய குடியிருப்பில் வசிக்கும் உக்தடுகொடே கெதர பபாணிஸ் அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் ............... ஆம் இலக்கத்தின் கீழ் ................ ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்த போதிலும் அவர் பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை எனஅறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2025.08.15 ஆந் திகதிக்கு முன்னனர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

கண்டி நிருவாக மாவட்டத்தில் பஸ்பாகே கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் பஸ்பாகே கோரளை மாபாகன்த வடக்காக கிராம அலுவலர் பிரிவில் தெகித என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும் - நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட எல் 61/17/4 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தில் - ஆல் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க "துண்டாடப்படும் வரைபடத்தில் - ஆல் தயாரிக்கப்பட்ட பீ. பீ. ஏ. 267 ஆம் இலக்க நிரல் குறிப்பில் 51 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் ஹெக்யார்கள்/ ஏக்கர் 01 ரூட் 0 பேர்ச்ஸ்24 விஸ்தீரணத்தை உடையதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகை பீ. பீயில் எல்லைகளைக் கொண்டதுமான அரசகாணி இங்குருஓய குடியிருப்பில்

வடக்கு : வழி பாதுகாப்பு;
கிழக்கு : இலக்கம் 50;
தெற்கு : இலக்கம் 56;
மேற்கு : இலக்கம் 52.

ஜே. எம். ரம்யா ஜயசுன்தர,
பிரதேச செயலாளர்,
யட்டினுவர.

2024, ஒற்றோபர் 31.

07 - 759/5

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) வது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்பு பத்திரத்தினை இரத்து செய்தல் (104 ஆம் பிரிவின் கீழான) அறிவித்தல்

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில், கொபேய்கனே பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் டப்ளிவ். திலிணி நிஸங்ஸலா சில்வா ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1986 ஆம் ஆண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியால் அன்பளிப்பு செய்யப்பட்ட எல்/எஸ்/கு/199 எனும் இலக்கத்தை கொண்ட அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான வாரியபொல, கணேவத்த வீதி, ஹொரம்புவ விலாசத்தில் வசிக்கும் பீலிக்ஸ் நிவ்டன் த சில்வா என்பவருக்கு வழங்கப்பட்டு குருநாகல் மாவட்டப் பதிவாளர் காரியாலயத்தில் இலக்கம் எல்டீஓ/07/14 இன் கீழ் 1986.05.29 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டதுமான கீழ் வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணியானது அதன், அளிப்பு

பத்திரத்திலுள்ள நிபந்தனைகளை மீறும் வகையில் உரிமை மாற்றம் செய்யப்பட்டிருப்பதால், அந்த அளிப்பு பத்திரத்தினை மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்தென்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஆட்சேபனைகள் இருப்பின் அதனை 2025.08.15 ஆந் திகதிக்கு முன்னதாக எனக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

குருநாகல் மாவட்டத்தில், கொபேய்கனே பிரதேச செயலகப் பிரிவில் பலதொர கோரலையில் 1292 - வலஸ்வெவ கிராம அலுவலர் பிரிவில், வலஸ்வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், குருநாகல் நில அளவையாளர் நாயகத்தின் காணி துண்டாடல் வரைபடத்தின் இ. கி. வ. இலக்கம் 1629 ஆல் 121 மற்றும் 128 ஆம் இலக்க காணித்துண்டுகளாக காட்டப்பட்டுள்ளதுமான, பிரமாணம் ஏக்கர் 13 ரூட் 00 பர்ச்சஸ் 23 விசாலம் கொண்டதுமான பின்வரும் எல்லைகளைக் கொண்ட அரச காணி -

காணியின் பெயர்: ஹெலம்பவெவஹேன மற்றும் தங்கஹமுலஹேன்யாய
வடக்கு : காணி துண்டு இலக்கம் 120;
கிழக்கு : திம்பிரிவெவ கிராம எல்லை;
தெற்கு : திம்பிரிவெவ கிராம எல்லை மற்றும் மாட்டு வண்டி பாதைக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கு நிலம்;
மேற்கு : மாட்டு வண்டி வீதிக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கு நிலம் மற்றும் கப்புகம கிராம எல்லை (வீதி மற்றும் வீதிகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கு நிலம் மற்றும் காணித் துண்டு இலக்கம் 125 உட்படுத்தப்படலாகாது).

டப்ளிவ். திலிணி நிஸங்ஸலா சில்வா,
பிரதேச செயலாளர்,
கொபேய்கனே.

2025, மாச்சு 08

07 - 826

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (பிரிவு 104) இற்கான அறிவித்தல்.**

வடமேல் மாகாண சபையின், புத்தளம் மாவட்டத்தின், வண்ணாத்திவில்லு பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச செயலாளர் எஸ். எம். பி. நந்தசேன ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1963.08.06 ஆந் திகதி, ஆர் 7077 எனும் இலக்கத்தையுடைய அளிப்பு பத்திரம் இல. 07, அரச வங்களா, பேராதனையில் வசிக்கும் எல். ஈ. ஏ. பொன்சேகா அவர்களுக்கு அளித்த, புத்தளம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் ஆர் 7077 கீழ் 1963.08.23 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே வரும் அட்டவணையில் காட்டப்படும் காணிக்கு உரிமை கோரும் பொருட்டு சட்டரீதியான உரித்தாளி எவரும் இல்லாதவிடத்து அல்லது உரிமை உள்ள ஒருவர் இருந்தும் அவர் உரிமையாளி ஆகுவதற்கு விருப்பாத போது உரிமை கோர எவரும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளதால் அந்த அளிப்புப் பத்திரத்தை மேற் கூறிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அதனை 2025.08.15 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தருதல் வேண்டும்.

**அட்டவணை**

புத்தளம் நிர்வாக மாவட்டத்தின் வண்ணாத்திவில்லு பிரதேச செயலாளர் பிரிவின் பொன்பரப்பிப் பற்று வண்ணாத்திவில்லு வடக்கு கிராம அலுவலர் பிரிவின் வண்ணாத்திவில்லு எனும் பெயரிலான கிராமத்தில் அமைந்துள்ளதும், புத்தளம் நில அளவை அதிகாரியின் கீழுள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட இலக்கம் பி. பி. ஏ. 1710 ஐ

கொண்ட வரைபடத்தின் இலக்கம் 89 உடைய நிலத் துண்டாக காட்டப்பட்டுள்ளதும் அளவில் 26 ஏக்கர், 00 றூட், 38 பேர்ச் விஸ்தீரணத்தை கொண்டதும் கீழே காட்டப்படும் அடிப்படையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி.

வடக்கு : துண்டு இலக்கம் 88;
கிழக்கு : துண்டு இலக்கம் 62 மற்றும் பிரதான பாதைக்கான ஒதுக்கீடு;
தெற்கு : துண்டு இலக்கம் 90 பிரதேச சபை பாதை;
மேற்கு : துண்டு இலக்கம் 86.

எஸ். எம். பி. நந்தசேன,
பிரதேச செயலாளர்,
வண்ணாத்திவில்லு.

2025, மே 11

07 - 827

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/76892.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NWP/PLC/L10/MK/LTL/45.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின் மஹகும்புக்கடவலை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 612/D புனவிட்டிய கிராம அலுவலர் பிரிவின் புனவிட்டிய கிராமத்தில், குடியிருப்பு அலுவலரால் வரையப்பட்ட 2023/05 ஆம் இலக்க தோராயமான வரைபடத்தின் துண்டு இல. 1 இனால் காண்பிக்கப்பட்டுள்ள ஏக்கர்: 22, றூட்: 01, பர்ச்சஸ் 10 பரப்பளவு கொண்ட அரசாங்க காணியை விலங்கு வளர்ப்பு மற்றும் விவசாய நடவடிக்கைக்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றுத்தருமாறு திரு. கசதோருகே இரேஷ் ஷானக்க பெரேரா குத்தகைக்கு கோரியுள்ளார் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு: இ. கி. ப. 3168 (பாடியாமனுவ ஒரு பகுதி), இ.நி.ப. 28 துண்டு இல. 2167, 2157;
கிழக்கு: இ.நி.ப. 28 துண்டு இல. 2167;
தெற்கு: இ.நி.ப. 28 துண்டு இல. 2167, 1769, 1918, 1917, 1896;
மேற்கு: இ.நி.ப. 3168 (பாடியாமனுவ ஒரு பகுதி), இ. நி. ப. 28 துண்டு இல. 1824 2/2, 1751, 1752, 1753, 1766, 1770, 1769, 1917, 1896.

கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகள் மற்றும் கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.05.20 முதல் 2055.05.19 வரை)

(ஆ) வருடாந்த குத்தகைத் தொகை :- 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00 ) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டி ன் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா (ரூ. 5,000,000.00) அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை ஒவ்வொரு 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறிவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை :- தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது;

(இ) இந்தக் காணியை விவசாய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர், கருத்திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்ளினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டுள்ள/ அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கனை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2025.05.20 ஆந் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட விடயத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் தவிர ஏனைய உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூலை 07.

07 - 758

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/78523
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: එන්සීපී/පීඑල්සී/ එල්02/මනුප/2024 ii

### 21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டத்தின் நுவரகம் பலாத்த மத்தி பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்: 290, பூசியன்குளம் கிராம அலுவலர் பிரிவின் இலுப்புகுளம் கிராமத்தின் காணி அலுவலரால் வரையப்பட்ட தோராயமான சுவட்டு வரைபடத்தில் துண்டு இலக்கம்: 01 ஊடாக காண்பிக்கப்பட்டுள்ள 11 ஏக்கர், 29 பேர்ச் பரப்பளவு கொண்ட அரசாங்கக் காணியை வர்த்தக நோக்கத்திற்காக திரு. தொன் ஆனந்த பனாபிட்டிய எனும் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு: ஏ. ஏ. டீ. ஸ்ரீயா காந்தி மற்றும் ஜீ. டப்ளியு. ஏ. ரத்னசிறி ஆகியோரின் காணிகள்;
கிழக்கு: அரசாங்கக் காணி;
தெற்கு: வீரகோன் பண்டா, எஸ். குமாரி, எம். குமாரிஹாமி ஆகியோரின் காணிகள்;
மேற்கு: பாதைக்கான ஒதுக்கு.

02. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.04.10 முதல் 2055.04.09 வரை)

(ஆ) வருடாந்த குத்தகைத் தொகை :- 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00 ) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டி ன் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா (ரூ. 5,000,000.00) அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை ஒவ்வொரு 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது

முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை :- தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/ பிரதி மாகாண காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர் இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2025.04.10 ஆம் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றங்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூலை 07.

07 - 803

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/77197.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: PLC/L3/ 29/ 07/02- 2024.

**அரச காணிகள் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

களுத்தறை மாவட்டம் களுத்தறை பிரதேச செயலக பிரிவின் இலக்கம் 730 A, களபுவ கிராம அலுவலர் பிரிவின் கட்டுகுறுந்த கிராமத்தின் ka/KAL/2020/48 எனும் இலக்கமுடைய பருமட்டான வரைபடத்தின் காணித்துண்டு A என காட்டப்பட்டுள்ள 0.0512 ஹெக்டேயர் அளவுடைய அரச காணித்துண்டானது வர்த்தக நடவடிக்கைகளுக்காக பத்தேலியனராலலாகே தொன் பீலிக்ஸ் நிஹால் என்பவரால் குத்தகை அடிப்படையில் கோரப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரப்பட்டிருக்கும் காணியின் எல்லைகள் பினவருமாறு:

வடக்கு: கடற்கரை;
கிழக்கு: பாதை;
தெற்கு: கடற்கரை;
மேற்கு: கடற்கரை.

03. கோரப்பட்டிருக்கும் காணினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு வழங்க முடியும். எனவே இதன்பொருட்டு அரசினால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2024.12.30 திகதியில் இருந்து 2054.12.29 வரை)

(ஆ) வருடாந்த குத்தகைத் தொகை :- 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ. 5,000,000.00) குறைவாக காணப்படுமிடத்து பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டில் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூ. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2024 ஆம் அன்டில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் தொகையானது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், அக்குத்தகை தொகையானது கடந்த 05 வருட காலப் பகுதியின் இறுதியில் அறவிடப்பட்ட வருமாந்த குத்தகை தொகையின் 20% சேர்க்கப்படவேண்டும்.

தவணைக் கட்டணம் :- இல்லை;

(இ) குத்தகைக்கு பெறுனரினால் இக்காணி வர்த்தக நோக்கத்திற்காகவே அன்றி வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) குத்தகைக்கு பெறுனரினால் இக்குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப்பகுதியினுள் பிரதெச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களால் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்படவேண்டும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதியினுள் குத்தகைதாரரினால் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) குத்தகை நடைமுறைக்கு வரும் திகதியாகிய 2024.12.30 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் செய்வதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தவறாது தொடர்ந்து செலுத்த வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

இவ் அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கப்படக்கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளல் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூலை 07.

07 - 823

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/76110
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: සිපිඕ/එල්සී/එල්ඩී/4/1/28/222

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

மாத்தளை மாவட்டத்தின் கலேவலை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 437 E, புலனவெவ கிராம அலுவலர் பிரிவின் புலனவெவ கிராமத்தின் இ. கி. ப. 356 இன் துண்டு இலக்கம் 16 இன் ஒரு பகுதியை சுட்டிக்காட்டுவதற்காக கிராம அலுவலரால் வரையப்பட்ட ද/ප්‍රා.ලේ./2017/08/21 ஆம் இலக்க தோராயமான சுவட்டு வரைபடத்தின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள சுமார் 35 பர்ச்சஸ் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை சங்க நடவடிக்கைகளுக்காக வரையறுக்கப்பட்ட கலேவலை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு: அரசாங்கக் காணி;
கிழக்கு: குடியிருப்புப் பாதைக்கான ஒதுக்கு;
தெற்கு: குடியிருப்புப் பாதைக்கான ஒதுக்கு;
மேற்கு: கழிவுக் கால்வாய்.

கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.05.23 முதல் 2055.05.22 வரை)

(ஆ) வருடாந்த குத்தகைத் தொகை : தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் காணியின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 2% ஆகும்.

தவணைத் தொகை : தவணைத் தொகையொன்று அறவிடப்பட மாட்டாது;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை கூட்டுறைவுச் சங்க நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகக்காகப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் குத்தகை ஆரம்பிக்கும் திகதி முதல் ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) குத்தகை அமுல்படுத்தப்படும் 2025.05.23 ஆம் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் கழியும் வரை உப குத்தகைக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

கே. ஜீ. பீ. சௌம்யா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகதத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூலை 07.

07 - 824

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/76972.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: ඕපීඕ/එල්ඕ/ එල්ඩී/4/1/28/222.

### 21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

மாத்தளை மாவட்டத்தின் கலேவலை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 438 E, தன்டுபெந்திருப்ப கிராம அலுவலர் பிரிவின் தன்டுபெந்திருப்ப கிராமத்தின் இ. கி. ப. 399 இன் துண்டு இலக்கம் 586 இன் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள 01 றூட் 15 பேர்ச் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித்துண்டை சங்க நடவடிக்கைகளுக்காக வரையறுக்கப்பட்ட கலேவலை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

வடக்கு: துண்டு இலக்கம் 73, 585, 587;
கிழக்கு: துண்டு இலக்கம் 585, 587, 588;
தெற்கு: துண்டு இலக்கம் 588, 73;
மேற்கு: துண்டு இலக்கம் 73.

கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ்க் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.05.23 முதல் 2055.05.22 வரை)

(ஆ) வருடாந்த குத்தகைத் தொகை : தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் காணியின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 2% ஆகும்.

தவணைத் தொகை : தவணைத் தொகையொன்று அறவிடப்பட மாட்டாது;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை கூட்டுறவுச்சங்க நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகக்காகப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் குத்தகை ஆரம்பிக்கும் திகதி முதல் ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) குத்தகை அமுல்படுத்தப்படும் 2025.05.23 ஆம் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் கழியும் வரை உப குத்தகைக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

கே. ஜீ. பீ. சௌம்யா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத்த மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூலை 07.

07 - 825

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/77278.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: අම්/ඉකො/සද්/වාණි/59.

### 21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை பிரதேச செயலகப் பிரிவின் W/89/F, சத்தாதிஸ்ஸபுர கிராம அலுவலர் பிரிவில் சத்தாதிஸ்ஸபுர கிராமத்தல் ஆ. வ. ப. அம். 1406 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தின் துண்டு இலக்கம் 6 இன் ஒரு பகுதியைக் காண்பிப்பதற்காக அரசாங்கத்தின் பதிவு செய்யப்பட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளரால் தயாரிக்கப்பட்டுள்ள 1471/485 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு இலக்கம் A இனால் காண்பிக்கப்பட்டுள்ள 06 பேர்ச் பரப்பளவு கொண்ட காணித் துண்டை வர்த்தக நோக்கத்திற்காக மாஜி பிரியங்கா இஹலகெதர எனும் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

வடக்கு: பீ. பீ. அம். 1406 துண்டு இல. 06 மீதிப் பகுதி மற்றும் துண்டு இல. 05;
கிழக்கு: பீ. பீ. அம். 1406 துண்டு இல. 05 மற்றும் துண்டு இல. 07;
தெற்கு: பீ. பீ. அம். 1406 துண்டு இல. 07 மற்றும் கட. தி. வ. 280002 இன் துண்டு இல. 245;
மேற்கு: கட. தி. வ. 280002 இன் துண்டு இல. 245 மற்றும் பீ. பீ. அம். 1406 துண்டு இல. 06 மீதிப் பகுதி.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும்.

எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ்க் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.05.28 முதல் 30 வருடங்கள் முன்னோக்கி)

வருடாந்த குத்தகைத் தொகை : 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியா னது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாள ரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா (ரூ. 5,000,000.00) அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2025 ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை ஒவ்வொரு 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள், குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர் இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) மாகாண காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2025.05.28 ஆந் திகதி முதல் ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றங்களுக்கு வழங்கப்பட முடியாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டுராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

ஆர். டீ. எல். சமிந்து லக்ஷான் ஜயரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகதத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, யூலை 15.

07 - 828

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது